வேலூர் மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3918/ஆ2/2024    நாள்:27.09.2024

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி–கல்வி உதவித்தொகை–2023–2024ஆம் கல்வியாண்டில் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு/அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் பயிலும் பழங்குடியினர் இன மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை விடுவிக்க ஆதார் சீடிங் செய்ய அறிவுறுத்தல்–சார்பு. |
| பார்வை: | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கே6/162/2024 நாள்:20.09.2024 |

-------

வேலூர் மாவட்டம், 2023–2024ஆம் கல்வியாண்டில் Pre Metric Post Metric 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு/அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் பயிலும் கல்வி உதவித் தொகை பெறும் பழங்குடியினர் இன மாணவர்களில் 110 மாணவர்களின் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்யப்படாத நிலையில் உள்ளதால் கல்வி உதவித்தொகை விடுவிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதென பார்வையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நினைவூட்டலுக்கு இடமளிக்காமல் இக்கடிதம் பெற்றவுடன் இணைப்பில் உள்ள 110 மாணவர்களின் வங்கி கணக்குடன் ஆதார் சீடின் செய்திட அல்லது வங்கி கணக்கு இல்லாத மாணவர்களை இந்திய போஸ்டல் வங்கியின் (Postal Bank) மூலம் புதிய வங்கி கணக்கு எண் துவங்கிட இணைப்பில் உள்ள பள்ளியின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலைக் கல்வி/தனியார் பள்ளி) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:
1.2023–2024 ST Pre&Post Metric Scholarship Inactive List.
2. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடிதம்– நகல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை/தனியார் பள்ளி)
மாவட்டக் கல்வி அலுவலகம்
வேலூர்.
நகல்
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்
வேலூர்
(சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)